**செய்தி வெளியீடு எண்: 71** **நாள்:28.01.2013**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் தனி நபர் வருமானத்தினை உயர்த்துவதிலும் பெரும்பங்கு வகிக்கும் கால்நடை பராமரிப்புத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழக கிராமப்புற ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கென தமிழக அரசால் விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், பசுந்தீவன உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம், அனைத்து மாவட்டங்களிலும் கோழியின வளர்ப்பை பரவலாக்கும் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அதிக அளவில் கால்நடைகள் வழங்கப்படுதல் மட்டும் போதுமானதல்ல. அந்த கால்நடைகள் ஆரோக்கியமாக வாழ, அதிக அளவில் தரமான மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டும். இதற்காக தமிழகத்தில் அதிக அளவில் கால்நடை மருத்துவர்கள் உருவாக்கப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு, தென் மாவட்ட மக்களின் தேவைக்காக திருநெல்வேலியில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும், டெல்டா மாவட்ட மக்களின் தேவைக்காக தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரத்தநாட்டில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியும் அமைக்கப்படும் என சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, கால்நடை மருத்துவர்களை அதிகம் உருவாக்கும் வகையில், கால்நடைகள் அதிகமாக உள்ள பகுதியான தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என அழைக்கப்படும் தஞ்சை டெல்டா பகுதியில், அப்பகுதி விவசாய பெருமக்களின் நீண்ட நாளைய கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், ஒரத்தநாட்டில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை 85 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கென சென்ற ஆண்டு 16 கோடியே 34 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இங்கு கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக 177.92 ஏக்கர் நிலத்தினை நிலக்கிரயமின்றி உரிமை மாற்றிடம் செய்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

தற்பொழுது இந்த கல்லூரியில் பணியாற்றுவதற்காக பேராசிரியர் 13, இணை பேராசிரியர் 18, துணை பேராசிரியர் 36, துணை நூலகர் 1, துணை இயக்குநர், உடற்பயிற்சி 1, என 69 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்குவதற்கும், கணக்கு அதிகாரி 1, கண்காணிப்பாளர் 2, பண்ணை மேலாளர் 3, உதவியாளர் 7, மின்பணியாளர் 1, இளநிலை உதவியாளர்/தட்டச்சர் 20, ஆய்வக தொழில் நுட்பாளர் 16, ஆய்வக உதவியாளர் 5, ஏவலர்/விலங்கு ஏவலர் 20, ஓட்டுநர் 3 என 78 ஆசிரியரல்லாத பணியிடங்களை உருவாக்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட 37 கோடியே 85 லட்சம் ரூபாயும், தேவையான அனைத்து உபகரணங்களையும் வாங்கிட 3 கோடியே 62 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கிடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

திருநெல்வேலி, இராமையன்பட்டியில் 139.21 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்ற ஆண்டு உத்தரவிட்டார்கள். அதற்காக 12 கோடியே 59 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

தற்பொழுது இந்த கல்லூரியில் பணியாற்ற முதல்வர் (Dean) 1, பேராசிரியர் 17, இணைப் பேராசிரியர் 23, உதவி பேராசிரியர் 37, உதவி நூலகர் 1, துணை இயக்குநர், உடற்பயிற்சி கல்வி 1 என 80 ஆசிரியர் பணியிடங்களை உருவாக்குவதற்கும், நிர்வாக அலுவலர் 1, கணக்கு அதிகாரி 1, உதவி கணக்கு அதிகாரி 1, கண்காணிப்பாளர் 2, பண்ணை மேலாளர் 3, உதவியாளர் 7, மின்கம்பியாளர் 1, இளநிலை உதவியாளர்/தட்டச்சர் 20, ஆய்வக தொழிநுட்பாளர் 16, ஆய்வக உதவியாளர் 5, ஏவலர்/விலங்கின ஏவலர் 20, ஓட்டுநர் 3 என 80 ஆசிரியர் அல்லாத பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் இந்த கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட 43 கோடியே 91 லட்சம் ரூபாயும், தேவையான அனைத்து உபகரணங்கள் வாங்கிட 3 கோடியே 40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம், கால்நடைத் துறையில் அதிக அளவு கால்நடை மருத்துவர்களை உருவாக்கும் மாநிலமாக தமிழகம் திகழும்.

********

வெளியீடு:-இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை- 9.
நாள்:- 28.1.2013.